## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.**

**Case No : DVC.No.09/2022 Date:31.01.2024**
**Deposition of Witness for : ம.சா.1**
**Name : புவனேஸ்வரி**

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை-**

1. நான் தற்போது என்ன வேலை செய்துவருகிறேன் என்றால் நான் வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் உள்ளேன். திருமணத்திற்கு பின்னிட்டு தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்று என் கணவரிடம் முறையிட்டேன் என்றால் இல்லை. நான் அவ்வாறு தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்று கூறியபோது என் கணவர் என் பெற்றோருடன் தான் இருப்பேன் பெற்றோரை விட்டு வரமாட்டேன் என்று கூறினார் என்றால் நான் தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்று கூறவில்லை. மேற்படி பிரச்சனையினால் திருமணம் முடிந்த ஐந்து மாதத்தில் நான் என் கணவரிடம் கோபித்துகொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

2. என் தந்தை கடனில் இருப்பதால் அவருக்கு உதவிசெய்தால் தான் நான் என் கணவருடன் இருப்பேன் என்று என் கணவரிடம் கூறினேன் என்றால் இல்லை. திருமணத்திற்கு முன்பே லாரி வாங்குவதற்காக ரூ.4,70,000/- பணம் என் கணவரிடம் கேட்டேன் என்றால் இல்லை. அவ்வாறு நாங்கள் பணம் கேட்டோம் என்றும் அதற்கு என் கணவர் வீட்டில் தர மறுத்ததால் திருமணத்தை ஆ.று மாதம் தள்ளிபோடலாம் என்று எனது தாயார் கூறினார் என்றால் இல்லை. அதன்பிறகு ரூ.80,000/- பணம் என் கணவர் வீட்டார் எங்களுக்கு கொடுத்தார்கள் என்றும் அதன்பிறகு தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் கேட்டு நாங்கள் தொடர்ந்து என் கணவரை வற்புறுத்தினோம் என்றால் இல்லை. மீண்டும் ஏழு மாதத்தில் என் கணவர் பணம் கொடுக்கவில்லை என்று கோபித்துகொண்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

அதன்பிறகு என் கணவர் பலமுறை என்னை அழைத்தும் நான் அவருடன் வாழ செல்லவில்லை என்றால் சரியல்ல.

3. எனக்கு வளைகாப்பு முடிந்தபிறகு நான் என் பெற்றோர் வீட்டில் இருந்தபோது என் கணவர் என்னை பார்ப்பதற்கு வரும்போது பழங்கள் வாங்கி வருவார் என்றும், அதனை நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் அவர் வரவேஇல்லை. என் தந்தைக்கு சுமார் ஐந்து லட்சம் கடன் இருந்ததால் அந்த பணத்தை என் கணவர் கொடுத்தால் தான் கணவருடன் வருவேன் என்று நான் கூறினேன் என்றால் இல்லை. என் கணவரும் அவருடைய குடும்பத்தினரும் குழந்தையை பார்க்க வந்தபோது நாங்கள் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. பணம் கொடுத்து உதவவில்லை என்பதால் குழந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் பஞ்சாயத்து பேசி அதன்படி குழந்தையை பார்க்க அனுமதிக்க எனக்கு அறிவுறுத்தப்பட்டது என்றும் ஆனால் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தைக்கு பெயர் வைக்கும் நிகழ்ச்சிக்கு என் கணவரையும் அவருடைய குடும்பத்தினரையும் நாங்கள் அழைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய செயலால் என் கணவர் மனஅழுத்ததால் பாதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு என் மாமியார் என்னை நன்றாக கவனித்துவந்தார் என்றால் சரிதான். நான் என் பெற்றோர் வீட்டில் இருந்தபோது என்னை பார்ப்பதற்கு என் மாமியார் வருவார் என்றால் சரிதான்.

5. அவ்வாறு பார்க்கவந்தபோது என் மாமியார் என்னை என் கணவர் வீட்டிற்கு அழைத்துவந்தார் என்றால் சரிதான். அவ்வாறு வந்தபோது என்னுடைய தந்தைக்கு ரூ. 5,00,000/- கொடுத்தால் தான் நான் என்னுடைய கணவர் வீட்டில் இருப்பேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. மறுபடியும் ரூ.5,00,000/- பணம் கேட்டேன் என்றால் நான் கேட்கவில்லை அவர்கள்தான் கேட்டார்கள். எனது மாமியார் இறந்தபிறகு நான் மீண்டும் தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்று என் கணவரை வற்புறுத்தினேன் என்றால் இல்லை. நான் தொடர்ந்து வற்புறுத்தியதால் இரண்டாம் எதிர்மனுதாரர் எங்களை தனிகுடித்தனம் செல்லும்மாறு சொன்னார் என்றால் அவருக்கு என்னை பிடிக்காததால் அவ்வாறு சென்னார்.

6. நான் செல்போனில் அடிக்கடி தனியாக பேசிகொண்டிருந்ததால் அது சம்பந்தமாக என் கணவர் என்னை கேட்டு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. தனி வீடு பார்த்து குடும்பம் நடத்த வருமாறு 1ம் எதிர்மனுதாரர் அழைத்தபோது ரூ.5,00,000/- பணம் கொடுப்பேன் என்று கூறியதால்தான் நான் வந்தேன் என்றும், பணம் கொடுக்காததால் அவருடன் வாழ விருப்பம் இல்லை என்று தெரிவித்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்காததால் நான் கோபித்துகொண்டு கடந்த 20.04.2020 ம் தேதி என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

7. அப்போது என் கணவர் எனக்கு போன் செய்தார் என்றும் ஆனால் என்னுடைய செல்போன் சுவிச்ஆப் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகு என் கணவர் என்னை அழைத்துசெல்ல எங்கள் விட்டிற்கு வந்தபோது என் பெற்றோர் என் கணவரை பார்த்து பணம் கொடுக்க முடியவில்லை எப்படி என் மகளுடன் வாழ்வாய் என்று திட்டி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எச்.எம்.ஓ.பி. 107/2022 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள இடைமனுவில் மாதம் ரூ.8,000/- 1ம் எதிர்மனுதாரர் எனக்கு கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான காரணங்களை கூறி இந்த மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவரின் பெயரில் எந்த அசையும் மற்றும் அசையா சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்துக்கள் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டைவிட்டு செல்லும்போது என்னுடைய தங்க நகைகளை எடுத்துசென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்.. புவனேஸ்வரி

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2024.01.31 20:14:13 -1000

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.